கிரெடிட் கார்டு தொடர்பான முக்கிய தகவல்கள்

1. கிரெடிட் கார்டின் பில்களுக்கு காசோலை, டிராஃப்ட் அல்லது ரொக்கப் பணமாக எஸ்சிபி ஏடிஎம்-களில் அல்லது ஈசிஎஸ் (எலக்ட்ரானிக் கிளியரிங் சர்வீஸ்) வேண்டுதல் மூலம் செலுத்துதல். தயவுசெய்து உங்களது காசோலைகள் மற்றும் டிராஃப்ட்களை எஸ்சிபியின் ஏ/சி எண் **XXXX XXXX XXXX XXXX** (உங்களது எஸ்சிபி கார்டின் 16 எண்கள்) கொடுக்க கூடியதாக தயார்செய்யவும். தயவுசெய்து உங்களது காசோலைகள் / டிராஃப்ட்களை முழுமையாக நிரப்ப வேண்டும் மற்றும் முக்கியமான திருத்தங்கள் அருகே கையொப்பமிடவேண்டும். பேமென்ட் டியூ டேட்க்கு 3 தினங்களுக்கு முன்னதாக காசோலையை செக் கலெக்ஷன் பாக்ஸில் போடுமாறு உங்களை கேட்டுக்கொள்கிறோம். இருந்தபோதிலும் பேமென்ட் செய்யும் தேதி டியூ டேட்டாக இருக்கலாம். இது சரியான நேரத்தில் உங்களது கட்டணம் உங்களது கார்டின் கணக்கில் சேரவேண்டும் என்பதற்காக செய்யப்படும் வசதி ஆகும். பேமென்ட் டியூ டேட்டில் வங்கிக்கு பணம் கிடைக்கப் பெறவில்லை என்றால் லேட் பேமென்ட் சார்ஜ் விதிக்க வங்கிக்கு உரிமை உள்ளது. ஓவர் டியூ கணக்குகளுக்கு காசோலை மாறிய பின்னரே பேமென்ட் வரவு வைக்கப்படும். ரூ.20,000க்கும் மேற்பட்ட கட்டனத்திற்கு காசோலை மாறிய பின்னரே கணக்கின் வரம்பு அதிகரிக்கப்படும். ரொக்கப்பணத்தை வங்கியின் கிளையில் வழக்கமான வங்கியின் அலுவல் நேரத்தின்போது மட்டுமே செலுத்த முடியும். தயவுசெய்து ரொக்கப்பணத்தை செக் கலெக்ஷன் பாக்ஸில் போட வேண்டாம்.

2. வட்டி விதித்தல் : (மாதாந்திர கட்டணங்கள் முதலில் பழைய கடனை ஈடு செய்ய

| வாய்ப்பு | எவ்வாறு வட்டி விதிக்கப்படும் | |
|---|---|---|
| 1. மொத்த கடன் தொகை முழுவதும் ஒவ்வொரு மாதமும் பேமென்ட் டியூ டேட்க்கு முன்பாக செலுத்தப்பட்டால் | எவ்வித வட்டியும் விதிக்கப்படாது | |
| 2. மொத்த கடன் தொகையில் ஒவ்வொரு மாதமும் பேமென்ட் டியூ டேட்க்கு முன்பாக பாதி தொகை செலுத்தப்பட்டால் | டிரான்ஸாக்ஷன் தேதியிலிருந்து ஸ்டேட்மென்ட் தேதி வரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து டிரான்ஸாக்ஷன்களுக்கும் தற்போதைய ஸ்டேட்மென்டில் வட்டி விதிக்கப்படும்.<br><br>முந்தைய குளோஸிங் பேலன்ஸ்க்கு ஸ்டேட்மென்ட் தேதிக்கு பின்பு முதல் நாளிலிருந்து பேமென்ட் செய்த தினத்திற்கு முதல்நாள் வரை தற்போதைய ஸ்டேட்மென்டில் வட்டி விதிக்கப்படும். பேமென்ட் செய்த பின்பு இருப்பு இருக்கும் தொகைக்கு பேமென்ட் தினத்திலிருந்து ஸ்டேட்மென்ட் தினம்வரை வட்டி விதிக்கப்படும். | முந்தைய ஸ்டேட்மென்ட் தேதி: 1 ஆகஸ்ட்,<br>ஸ்டேட்மென்ட் பேலன்ஸ் : ரூ. 10,000 /-<br>பேமென்ட் டியூடேட் 18 ஆகஸ்ட்<br>டிரான்ஸாக்ஷன் நடந்த தேதி ஆகஸ்ட் 15 : 3,000 /-<br>பேமென்ட் : ரூ. 8,000 /-ஆகஸ்ட் 18-ல் பெறப்பட்டது.<br>தற்போதைய ஸ்டேட்மென்ட் தேதி : செப்டம்பர்1,<br>இவ்வாறிருந்தால் ரூ. 10,000 க்கு ஆகஸ்ட் 2 லிருந்து ஆகஸ்ட் 17 வரை வட்டி விதிக்கப்படும் மேலும் பேமென்ட் செய்யப்படாத ரூ.2000க்கு ஆகஸ்ட் 18லிருந்து செப்டம்பர் 1 வரை வட்டி விதிக்கப்படும்.<br>மேலும் ரூ. 3000 க்கு ஆகஸ்ட் 15 லிருந்து செப்டம்பர் 1 வரை வட்டி விதிக்கப்படும். |
| 3. நீங்கள் வழக்கமாக பாதி பேமென்ட் செய்து வந்து, ஆனால் இந்த மாதம் பேமென்ட் டியூ டேட்க்கு முன்பாக மொத்த நிலுவை தொகை செலுத்தினால் | முந்தைய ஸ்டேட்மென்டின் படி குளோஸிங் பேலன்ஸ் பேமென்ட் செய்த தேதி வரை வட்டி விதிக்கப்படும். | முந்தைய ஸ்டேட்மென்ட் தேதி: ஆகஸ்ட் 1,<br>குளோஸிங் பேலன்ஸ் ரூ. 10,000/-<br>தற்போதைய ஸ்டேட்மென்ட் தேதி : செப்டம்பர்1<br>டியூடேட் : ஆகஸ்ட் 18<br>பேமென்ட் : ரூ 10,000/- ஆகஸ்ட் 15ல் செலுத்தப்பட்டது. இதற்கு ஆகஸ்ட் 2லிருந்து ஆகஸ்ட் 14 வரை (31நாட்கள் கொண்ட ஆகஸ்ட் மாதத்தில் 13 நாட்களுக்கு) வட்டி விதிக்கப்படும். |

எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்)

* ரொக்க டிரான்ஸாக்ஷன்கள் இதில் அடங்காது.

^ இந்த கணக்கில் வரவு = 10,000 x 3.1 % x 13/31 = ரூ. 130.00 ஆக இருக்கும்.

3. அனுவலைஸ்ட் பெர்ஸென்டேஜ் ரேட் : மாதாந்திர வட்டி வீதப்படி ஆண்டுக்கான வட்டி வீதம் ஏபிஆர் என்று கூறப்படுகிறது. ரொக்கம் மற்றும் சில்லறை டிரான்ஸாக்ஷன்கள் மீது மாதாந்திர வட்டி வீதமான 3.1% பி.எம். விதிக்கப்படும், இது அனுவலைஸ்ட் செய்யப்பட்டு ஏபிஆர் 37.20% ஆக கணக்கிடப்படும். இது ரொக்கம் மற்றும் சில்லறை டிரான்ஸாக்ஷன் ஆகிய இரண்டுக்கும் 2.49% பி.எம். (ஏபிஆர் 29.88%)லிருந்து 3.40% பி.எம். (ஏபிஆர்40.80%) வரை வேறுபடக்கூடியது. உங்களது வட்டிவீதம் பற்றி உங்களது ஸ்டேட்மென்டில் உங்களுக்கு தெரிவிக்கப்படும் உங்களது கார்டின் பயன்பாடு மற்றும் கடனை திருப்பி செலுத்தப்படுவதை பொருத்து வங்கியின் தனி உரிமைப்படி 3 மாதங்களுக்கு ஒரு முறை உங்களுக்கான ஏபிஆர் மதிப்பீடு செய்யப்படும், விதிக்கப்படும். பேமென்ட் முழுவதுமாக செலுத்தப்படாவிட்டால். டியூ டேட்டிற்குள் மினிமம் அமௌன்ட் டியூ(எம்ஏடி) செலுத்தப்பட்டிருந்தாலும் கூட டோட்டல் அமௌன்ட் டியூவிற்கு (டிஏடி) வட்டி விதிக்கப்படும். ஈஎம்ஐ கார்டுகளுக்கு மாதாந்திர வட்டி வீதம் 2%, இது அனுவலைஸ்ட் செய்யப்படும்போது ஏபிஆர் 24% ஆகிறது. இது ரூ. 2000க்கும் மேற்பட்ட தொகைக்கான டிரான்ஸாக்ஷன்களுக்கு மட்டுமே செல்லுபடியாகக் கூடியது.

4.மினிமம் அமௌன்ட் டியூ : பேமென்ட் செய்வது தவறாத பட்சத்தில் ஒவ்வொரு மாதத்தின் குறைந்த பட்சகட்டணத்தொகை பில்லின் மொத்த தொகையில் 5% ஆக இருக்கும். கட்டணம் தவறவிடப்பட்டு இருந்தால், செலுத்த வேண்டிய மொத்த தொகையையும் செலுத்த வேண்டியிருக்கும். ஈஎம்ஐ கார்டு அல்லது அந்த கார்டின் கணக்கில் கடன் பெற்றிருந்தால் கடனிற்கான ஈஎம்ஐயும் மேற்கண்ட தொகையில் சேர்க்கப்படும். மேலும் கார்டின் கணக்கில் கொடுக்கப்பட்ட வரம்பை மீறி பயன்படுத்தப்பட்டு இருந்தால் மேலே கூறப்பட்ட தொகையுடன் வரம்பை கடந்த தொகையும் சேர்க்கப்படும். நீங்கள் ரூ.5,000 செலவு செய்திருப்பது ஒவ்வொரு மாதமும் சரியாக எம்ஏடி-ஐ (குறைந்த பட்சகட்டணம் ரூ.100ஐ பொருத்தது) மட்டும் செலுத்தி வந்தால் முழுத்தொகையையும் செலுத்தி முடிக்க 6 ஆண்டுகள் வரை ஆகும். எனவே உங்களுக்கு பணம் வரும் பொழுதெல்லாம் குறைந்த பட்சகட்டணத் தொகையை விட கூடுதலாக செலுத்துமாறு நாங்கள் உங்களுக்கு கருத்து தெரிவிக்கிறோம்.

● கிரெடிட் கார்டுகள் என்பவை குறுகிய கால கடன் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட கடன் வசதி ஆகும். உங்களுக்கு நீண்ட கால நிதியுதவி தேவைப்பட்டால், அதற்கு தேவையான கடன் திட்டங்களும் எங்களிடம் உள்ளன. மேலும் விபரங்கள் அறிய எங்களது ஹெல்ப்லைன் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

5. அதிக பட்சவட்டியில்லா காலம் : எஸ்சிபி கார்டுகளில் அனைத்து கோல்ட் மற்றும் நான்-கோல்ட் கார்களுக்குமான பேமென்ட் டியூ டேட் ஸ்டேட்மென்ட் தேதியிலிருந்து 18 நாட்கள் (18 வது நாள் ஞாயிறு கிழமையாக இருந்தால் 17 நாட்கள்) ஆகும். இருந்தபோதிலும் ரொக்கமாக பணம் எடுப்பதற்கு டிரான்ஸாக்ஷன் தினத்திலிருந்து வட்டி விதிக்கப்படும். முன்னறிவிப்பு மூலம் வட்டியில்லா காலத்தை மாற்றும் உரிமையை வங்கி தக்க வைத்துக்கொண்டுள்ளது.

6. பில்லிங் பிரச்சனைகளுக்கு தீர்வு : பில்லிங்கில் உள்ள பிரச்சனைகள் குறித்து ஸ்டேட்மென்டை பெற்ற தினத்திலிருந்து 21 தினங்களுக்குள் வங்கிக்கு தெரிவிக்க வேண்டும். அதற்கு தேவையான ஆவணங்கள் ஏதாவது இருந்தால் அவற்றுடன் வாடிக்கையாளரின் கையொப்பமிட்ட கடிதம் அல்லது டிஸ்பியூட் டிக்ளேரேஷன் ஃபார்ம் (டிடிஎஃப்) கொடுப்பது அவசியம். பிரச்சனையை பொருத்து அதற்கு தீர்வு காணப்படுவதற்கான செயல்முறை காலம் வேறுபடலாம். பிரச்சனைகளை தெரிவிப்பதற்கான ஆவணங்கள் மற்றும் செயல்முறைகள் பற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்பினால் தயவுசெய்து வங்கி கார்டின் ஹெல்ப் லைன் சென்டரை தொடர்புகொள்ளவும் அல்லது வங்கியின் இணையதளம் www.standardchartered.co.in-ற்கு வருகை தரவும்.

7. ஆட் ஆன் கார்டுகள் : ஒரு கணக்கில் ஒன்றுக்கும் மேற்பட்ட கார்டுகள் வழங்கப்பட்டிருக்கும்போது அந்த கணக்கில் கூடுதல் கார்டை வைத்திருப்பவர் மற்றம் அந்த கார்டை வழங்க அதிகாரமளிக்கும் கணக்கை வைத்திருப்பவர் ஆகிய இருவரும் பயன்படுத்தப்பட்ட கார்டு / களுக்கு ஆகும் அனைத்து கட்டணங்களுக்கும் கூட்டாக மற்றும் தனித்தனியாக பொறுப்புள்ளவர்கள் ஆவர்.

8. காணாமல் போன அல்லது திருடு போன கார்டு குறித்து உடனே தெரிவித்தல் : கார்டு இந்திய எல்லைக்குள் காணாமல் போனால் அல்லது திருடு போனால் கார்டை வைத்திருப்பவர் உடனே அருகிலுள்ள கஸ்டமர் சர்வீஸ் ஹெல்ப்லைனில் தொடர்புகொண்டு தெரிவிக்க வேண்டும். முழு விபரங்களுக்கு தயவுசெய்து கார்டு மெம்பர் விதிமுறைகளை படித்து தெரிந்துகொள்ளவும்.

9. காணமல் போன கார்டிற்கு பொறுப்பு : கார்டு தொலைந்து போனது குறித்து இத்தியாவில் உள்ள வங்கியின் கார்டு சர்வீஸ் சென்டர் அல்லது விசா/ மாஸ்டர்கார்டுகளின் குளோபல் எமர்ஜென்ஸி அசிஸ்டென்ஸ் ஹெல்ப்லைனில் தெரிவிக்காத வரை அந்த கார்டு மீதான கட்டணங்களுக்கு கார்டு மெம்பரே பொறுப்பு. கார்டுமெம்பர் ஒரு கார்டு கணாமல் போனது, திருடுபோனது அல்லது சேதமடைந்தது என்று அறிவித்து பின்னர் அந்த கார்டு கிடைக்கப்பெற்றால் அது குறித்து வங்கிக்கு தெரியப்படுத்திவிட்டு அதை அழித்து செல்லாததாக்குவது கார்டு மெம்பரின் தனி பொறுப்பு ஆகும்.

10. ஸ்டேட்மென்ட் வழங்குதல் : ரூ. 100 க்கும் மேலாக பேலன்ஸ் உள்ள கணக்குகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஸ்டேட்மென்ட்கள் அனுப்பப்படும். ரூ.100 க்கும் குறைவான பேலன்ஸ் உள்ள கணக்குகளுக்கு அந்த கணக்கில் புதிய டிரான்ஸாக்ஷன் செய்யப்படும்போது ஸ்டேட்மென்ட் வழங்கப்படும். மேலும் கார்டுஹோல்டர் தனது கணக்கில் கிரெடிட் பேலன்ஸ் வைத்திருந்தால் அவருடைய கிரெடிட் பேலன்ஸ் இந்திய ரூபாய் 250க்கும் மேலாக இருந்தால் மட்டுமே அவருக்கு ஸ்டேட்மென்ட் வழங்கப்படும்.

11. கார்டு விதிமுறைகளில் திருத்தம் செய்யப்படுதல் : பின்வருமாறு கார்டின் விதிமுறைகளின் 18(பி) விதிமுறையின் திருத்தம் மேற்கொள்ளப்படும் : “18(பி) : கார்டுமெம்பருக்கு வங்கியால் அனுப்பி வைக்கப்படும் கார்டின் பில்லிங் ஸ்டேட்மென்ட் உட்பட அனைத்து ஆவணங்கள் / கடிதங்கள் ஸ்டேட்மென்டின் பின்புறத்தில் அச்சிட்டுள்ள பட்சத்தில் அல்லது தனி கூரியர் சர்வீஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டால் அல்லது வங்கியில் கார்டுமெம்பர் இறுதியாக பதிவு செய்த இந்திய எல்லைக்குள் உள்ள அவரது முகவரிக்கு சாதாரண அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டால் அவை முறையாக அனுப்பி வைக்கப்பட்டதாக கருதப்படும் மற்றும் ஸ்டேட்மென்ட் அல்லது நோட்டீஸ் அஞ்சல் செய்யப்பட்ட அல்லது அதனை கூரியர் சர்வீஸில் ஒப்பக்கப்பட்ட தினத்திலிருந்து 4 வது நாள் முடிவடையும்போது அது போன்ற சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதாக கருதப்படும். கார்டுமெம்பர் இந்தியாவுக்கு வெளியே உள்ள முகவரியை வங்கியில் பதிவு செய்யும்போது வங்கி எந்த சூழ்நிலையிலும் அவருக்கு கார்டு ஸ்டேட்மென்டை அனுப்ப தேவையில்லை என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் வங்கியிடமிருந்து அவரது கார்டிற்கான டியூ தொகையை உறுதி செய்துகொள்வது அதை டியூ டேட்டிற்கு முன்னதாக செலுத்துவது ஆகியவை கார்டு மெம்பரின் பொறுப்பு ஆகும். ஸ்டேட்மென்ட் ஈ-மெயில் வழியாக அனுப்பி வைக்கப்படும் (கார்டுமெம்பர் ஈ-ஸ்டேட்மென்ட்டுக்கு பதிவு செய்திருந்தால்).

12. நிறுத்துதல் : கணக்கு வைத்திருப்பவர் எந்த நேரமும் வங்கியின் கார்டு சர்வீஸ் சென்டர்களில் அல்லது வங்கியில் தொலைபேசி மூலமாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ தெரிவித்து கணக்கை நிறுத்திக்கொள்ளலாம். அது போன்ற அறிவிப்பு, வங்கியின் கார்டு சர்வீஸ் சென்டர்களில் அல்லது வங்கியில் தெரிவிக்கப்பட்டு அந்த கார்டு மீதான அனைத்து கட்டணங்களையும் கார்டுமெம்பர் செலுத்தியபின் அந்த கார்டை அழித்துவிட்டதுமே பின்னர் நடைமுறைப்படுத்தப்படும்.

13. கிரெடிட் லிமிட் : கடன் வரம்பு என்பது வங்கியின் தனி உரிமையின் படி நிர்ணயம் செய்யப்படுவதாகும். மொத்த கடன் வரம்பில் பயன்படுத்தப்பட்ட வரம்பை கழித்தது போக மீதியுள்ள அளவே கிடைக்கக்கூடிய கடன் வரம்பு ஆகும். கார்டுமெம்பர் கார்டின் கடன் வரம்பிற்குள் ஏதாவது கடன் வாங்கியிருந்தால் கிடைக்கக்கூடிய கடன் வரம்பை கணக்கிட டோட்டல் கிரெடிட் லிமிடிலிருந்து கடன் நிலுவை தொகை கழிக்கப்படும்.சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் உங்களது கிரெடிட் லிமிட்டை குறைக்கும் தனி உரிமையை வங்கி தன்னிடமே தக்க வைத்துக்கொள்கிறது. அதில் சில சூழ்நிலைகளில் உங்களது கிரெடிட் ரொக்கப்பணத்தை பயன்படுத்துவது, கடன் வசதி அளிக்கப்பட்ட 90 நாட்களுக்குள் நகைகள் வாங்குதல், மற்றும் வரம்பை மீறி பயன்படுத்துதல், பொருந்தும் நேரத்தில் கடன் வரம்பை குறைப்பதை பற்றி, குறைக்கும் போது வங்கி தெரிவிக்கும்.

14. கேஷ் அட்வான்ஸ் லிமிட் : ரொக்க முன்பண வரம்பு என்பது கடன் வரம்பில் உள்ள நிலையான சதவீத தொகையல்ல, ஆனால் மாதந்தோறும் மதிப்பிடப்படுவது ஆகும். இதனுடைய கட்டணங்கள் பற்றி மேலும் விபரம் அறிய விரும்புவோர் தயவுசெய்து கார்டு சர்வீஸ் ஹெல்ப்லைன் எண்களில் தொடர்பு கொள்ளவும்.

15. தகவல் பகிர்வு : கார்டுஹோல்டரின் ஒப்பந்த விதிமுறைகளின்படி ஸ்டேன்டர்ட் சார்ட்டட் வங்கி கார்ட்மெம்பர்களின் கணக்கு விபரங்களை அது தன்னுடைய குழுமத்தை சேர்ந்த நிறுவனங்கள் இந்தியா அல்லது வெளிநாட்டை சேர்ந்த அல்லது வியாபாரிகள் ஆகியோருடன் பகிர்ந்துகொள்ள அதிகாரம் பெற்றுள்ளது. மேலும் வங்கி உங்களது கிரெடிட் விபரங்களை கிரெடிட் இன்ஃபார்மேஷன் பீரோ (இண்டியா) லிமிடெட்(சிஐபிஐஎல்)., அல்லது அதன் தனி உரிமைப்படி தேவைப்படுவதாக கருதப்படும் ஏஜென்சிக்கு கார்டுமெம்பர்களின் தகவல்கள், பெறப்பட்ட கிரெடிட் வசதி / பெற இருக்கிற வசதி, அது தொடர்பாக கார்ட்ஹோல்டரால் ஏற்கப்பட்ட கடமைகள் / ஏற்க இருக்கிற கடமைகள், மற்றும் அது போன்ற கடமைகளை நிறைவேற்ற கூறி நிறைவேற்ற தவறியது ஏதாவது இருந்தால் தெரிவிக்க அதிகாரம் உள்ளது. மேலும் 2005ம் ஆண்டு கிரெடிட் இன்ஃபார்மேஷன் கம்பெனிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் படி எந்த ஒரு அதிகாரம் பெற்ற நிறுவனமாவது சட்டத்திற்குட்பட்டு கேட்டுக்கொண்டால், அதற்கு இணங்கி கார்டுமெம்பரை ஆலோசனை செய்யாமலேயே அவரது தகவல்களை அளிக்க அதிகாரம் பெற்றுள்ளது. சேவை வழங்குதல் / குறிப்பிட்ட சேவைகள் வழங்கும் நோக்கத்திற்காக வங்கி / விசேஷமான சேவைகளுக்காக மறற் சர்வீஸ் புரவைடர்கள் / ஏஜென்ட்களை ஈடுபடுத்த வேண்டியிருக்கலாம். இந்த சர்வீஸ் புரவைடர்கள் / ஏஜென்ட்களுக்கு வங்கி உங்களது கணக்கு பற்றிய தகவல்களை அளிக்க இதையே உறுதியாகவும் ஒப்பந்தமாகவும் கருதப்படும்.

16. தவறுதல் பற்றிய தகவல் மற்றும் சூழ்நிலைகள் :

அ) குறைந்தபட்சகட்டணத்தொகையை 150 நாட்களுக்குள் செலுத்தாத பட்சத்தில் கார்டுஹோல்டர் கடனை திருப்பி செலுத்தாதவர்கள் என்று வகைப்படுத்தப்படுவர். பேமென்ட் விபரம் மாதாந்திர அடிப்படையில் கிரெடிட் இன்ஃபார்மேஷன் பீரோ(இண்டியா) லிமிடெடுடன் (சிஐபிஐஎல்) பகிர்ந்துகொள்ளப்படுகிறது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். எனவே ஒவ்வொரு மாதமும் தவணையை செலுத்த தவறியது பற்றிய விபரம் சிஐபிஐஎல்க்கு அளிப்பட்ட விபரங்களில் அடங்கும். 150 நாட்களுக்கு குறைந்தபட்சகட்டண தொகையை செலுத்தாதது பற்றிய கார்டுஹோல்டரின் விபரங்கள் சத்யம் நிறுவனத்தால் நிவகிக்கப்பட்டு வரும் கடனை செலுத்த தவறியவர்களது தகவல் தொகுப்பிற்கு வழங்கப்படும்.

ஆ) கட்டணங்களை செலுத்திய பின்பு கடனை செலுத்த தவறியவர்கள் பட்டியல் / தகவல் தொகுப்பிலிருந்து பெயரை நீக்கும். இருந்த போதிலும் சிஐபிஐஎல்க்கு வழங்கப்பட்ட தகவல்களில் வாடிக்கையாளர்களின் கடன் / செலுத்திய விபரம் தொடர்ந்து இடம்பெறும், மற்றும் அதனை வங்கியால் விலக்கிக்கொள்ள முடியாது.

இ) கடனை செலுத்த தவறினால் திருப்பி வசூலிக்கும் செயல்முறை தொடர்ந்து கடிதங்கள் அனுப்புவது, தொலைபேசியில் தொடர்பு கொள்வது, எஸ்எம்எஸ், ஈமெயில் மற்றும் ஏதாவது வேறு தொடர்பு மூலமாக மற்றும் தேவைப்பட்டால் நேரடியாக சந்தித்து கடனை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

ஈ) கார்டுஹோல்டர் இறக்க நேரிட்டால் / நிரந்தரமாக கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையை அடைந்தால் வசூலிப்பது : கார்டுஹோல்டர் இறந்துவிட்டது உறுதி செய்யப்பட்டால் அவரது பெயர் கணக்கு புத்தகங்களிலிருந்து நீக்கப்படும் மற்றும் நிலுவையில் உள்ள தொகை வராத கடனாக எழுதப்படும். இறந்தவர் சம்பந்தப்பட்டவர்கள் அவரது கடனை திருப்பி செலுத்த விருப்பம் தெரிவித்திருந்தால் அது பற்றி வங்கி பரஸ்பர பேச்சுவார்த்தை நடத்தும், கார்டுஹோல்டர் நிரந்தரமாக கடனை திருப்பி செலுத்த முடியாது போனால் கார்டுஹோல்டரின் வழக்கமான விதிமுறைகள் பொருந்தும்.

17. குறை தீர்ப்பு நீட்டிப்பு : உங்களுக்கு கிடைத்த பதில் திருப்திகரமாக இல்லாவிட்டால் தயவு செய்து சிடிகே சாய் நாராயண், ஹெட் சர்வீஸ், ஸ்டேன்டர்ட் சார்ட்டட் பேங்க், கஸ்டமர் கேர் யூனிட், 19, ராஜாஜி சாலை, சென்னை- 600001: +9199002 600467 என்ற முகவரிக்கு கடிதம் எழுதவும் அல்லது head.service@in.standardchartered.com என்ற முகவரியில் ஈ-மெயில் செய்யவும்.

18. இந்திய ரிசர்வ் வங்கியின் மற்றும் வங்கியின் நோ யுவர் கஸ்டமர் (கேஒய்சி) தேவைகளுக்கேற்ப அவ்வப்போது வங்கிக்கு தேவைப்படும் ஆவணங்களை அளிக்க நான் ஒப்புக்கொள்கிறேன். அவ்வாறு தேவைப்படும் ஆவணங்களை அளிக்க தவறினால் அளிக்கப்பட்ட கடன் வசதியை திரும்ப பெற, எதுவும் இருந்தால் உத்தரவாதம் மற்றும் பாதுகாப்பை நடைமுறைப்படுத்த மற்றும் எதுவும் பேலன்ஸ் இருந்தால் அதனை உங்களிடமிருந்து வசூலிக்க அல்லது நிலுவையில் உள்ள தொகையை வசூலிக்க தக்க நடவடிக்கை எடுப்பது அல்லது கணக்கை முடிப்பது ஆகிய உரிமைகளை வங்கி தக்க வைத்துக்கொள்கிறது.

19. இதில் கூறப்பட்டவை அல்லாமல் இந்த வசதியை வங்கியின் தனி உரிமையின் கீழ் அளிக்கப்படுகிறது, எனவே இது ரத்து செய்யப்படவும் மற்றும் / அல்லது வங்கி எந்த நேரம் கேட்டுக்கொண்டாலும் முன்னதாகவே திருப்பி செலுத்தவும் வேண்டுவது, அவ்வாறு கேட்டுக்கொண்டால் வாடிக்கையாளர் அதனை வங்கிக்கு திருப்பி செலுத்த வேண்டும்.

20. பிராந்திய மொழிகளில் 10 மொழிகளில் கொடுக்கப்பட்டுள்ள கார்டுமெம்பரின் விதிமுறைகளை படித்து அறிந்து கொள்ள http:/www.standardchartered.com/in/cb/creditcard/card_main.html என்ற இணையதள பக்கத்திற்கு வருகை தரவும்.

2006ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த கட்டணங்கள்:

● லேட் ஃபீ கட்டணங்கள் : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ச்சியான மாதங்களில் மினிமம் அமௌன்ட் டியூவை செலுத்த தவறினால் ரூ. 100/- லேட் ஃபீஸாக வசூலிக்கப்படும்.

● கூடுதல் கட்டணங்கள் : ரயில்வே டிரான்ஸாக்ஷன்களில், டிராக்ஸாக்ஷன் தொகையில் 2.5% அல்லது ரூ.25/- (எது அதிகமாக இருக்கிறதோ அது) வசூலிக்கப்படும். பெட்ரோல் டிரான்ஸாக்ஷன்களில், டிரான்ஸாக்ஷன் தொகையில் 2.5% அல்லது ரூ.10/-(எது அதிகமாக இருக்கிறதோ அது) வசூலிக்கப்படும்.

● ஓவர்லிமிட் கட்டணங்கள் : ஒவ்வொரு முறையும் வரம்பை மீறும்போது ஓவர்லிமிட் கட்டணமாக ரூ.500 வசூலிக்கப்படும்.

● டூப்ளிகேட் ஸ்டேட்மென்ட் கட்டணம் : ஒவ்வொரு ஸ்டேட்மென்ட்க்கும் (அது மூன்று மாதத்திற்கும் பழையதாக இருந்தால்) ரூ.25/- கட்டணமாக வசூலிக்கப்படும்.

● வேறு கார்டு தருவதற்கான கட்டணம் : ஒவ்வொரு கார்டுக்கும் ரூ.100

● வேறு பின் நம்பர் தருவதற்கான கட்டணம் : ஒவ்வொரு பின் நம்பருக்கும் ரூ.100

● அவுட்ஸ்டேஷன் டெலிடிராஃப்ட் கட்டணம் : ஒவ்வொரு முறைக்கும் ரூ.50

● ரிட்டர்ன் செக் கட்டணம் : ஒவ்வொரு முறைக்கும் ரூ.300/-

● ஃபாரின் கரண்ஸி டிரான்ஸாக்ஷன்கள் : இந்திய பணம் அல்லாத பணத்தில் செய்யப்பட்ட டிரான்ஸாக்ஷன்கள் எங்களது வினியோகஸ்தர்கள் (விசா / மாஸ்டர்) அறிவுறுத்தியபடி இந்திய பணமாக மாற்றப்படும். வங்கி அந்த டிரான்ஸாக்ஷன் மீது 2.5% கூடுதல் கட்டணம் வசூலிக்கும்

மேலும் அந்த வினியோகஸ்தர்களுக்கு பணம் அனுப்பி வைப்பதற்காக கூடுதலாக 1% கட்டணம் வசூலிக்கப்படும்.

● பிராஞ்ச் டிரான்ஸாக்ஷன் கட்டணம்: எஸ்சிபி வங்கி கிளையில் டெல்லர் வசதியை பயன்படுத்தி ரொக்கப்பணம் செலுத்தினால் ஒவ்வொருமுறையும் ரூ. 99 கட்டணமாக வசூலிக்கப்படும்.

● சேவை வரி : சேவைவரி கட்டணமாக 12.36% சர்வீஸ் டேக்ஸ் வசூலிக்கப்படும். "கிரெடிட் கார்ட், டெபிட் கார்ட், சார்ஜ் கார்ட் அல்லது மற்ற பேமென்ட் கார்ட் சர்வீஸ்கள்" அடிப்படையில் சர்வீஸ் டேக்ஸ் பதிவு எண். எஸ்டி / மும்பை / சிடிசிஔஎஸ்/டிஎன் 1/13/2006. பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் ஸ்டேன்டர்ட் சார்ட்டர்ட் பேங்க், 23-25, எம்.ஜி.ரோட், ஃபோர்ட், மும்பை 400001. சென்வாட் கிரெடிட் விதிமுறைகள் 2004ன் கீழ் எந்தவித நீக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட கட்டணங்களுக்காக உரிமைகோர முடியாது.

2007 ஜுன் 18ம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டணங்கள் :
லேட் பேமென்ட் கட்டணங்கள்: ● ரூ. 10,000க்கும் மேலாக நிலுவையில் இருக்கும் ஸ்டேட்மென்ட்டிற்கு ரூ.350 ● ரூ.10,000 லிருந்து ரூ.20,000 வரையிலிருக்கும் ஸ்டேட்மென்ட்டிற்கு ரூ.500 ● ரூ. 20,000 மேலாக நிலுவையிலிருக்கும் ஸ்டேட்மென்டிற்கு ரூ. 600.

உதாரணமாக : உங்களது கிரெட்கார்டில் நிலுவையிலிருக்கும் தொகை ரூ.7000 ஆக இருந்து உங்களது பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர் கணக்கில் ரூ. 15,000 இருக்கும் நிலையில் பேமென்ட் டியூ டேட்டில் பணம் செலுத்தப்படாமல் இருந்தால். உங்களது கிரெடிட் கார்டில் லேட் பேமென்ட் கட்டணமாக ரூ.350 மற்றும் உங்களது கணக்கின் பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர் கட்டணமாக ரூ. 500ம் வசூலிக்கப்படும். இந்த கணக்குகள் விளக்கம் கூறும் நோக்கத்தில் மட்டுமே தரப்பட்டவை ஆகும். அனைத்து கார்டுகளிலும் மற்றும் தவணை முறை திட்டங்களான இன்ஸ்டாபை, பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர், டயல்-ஏ-லோன் போன்றவற்றிற்கு பேமென்ட் டியூ டேட்டில் பணம் செலுத்தப்படாவிட்டால் லேட் பேமென்ட் கட்டணம் விதிக்கப்படும்.

● கேஷ் அட்வான்ஸ் கட்டணம் : ● ஏடிஎம் வித்டிராவல்ஸ் : கேஷ் வித்டிராவல்களில் எடுக்கப்பட்ட தொகையில் 3% , குறைந்தது ரூ.300. ● எங்களது கிளைகளில் உள்ள டெல்லர் வசதியை பயன்படுத்தி வித்டிராவல் செய்வதற்கு கூடுதல் கட்டணமாக ரூ. 500 வசூலிக்கப்படும்.

2007 செப்டம்பர் 15ம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டணங்கள் :
பயன்படுத்தாதற்கான கட்டணம் : கடந்த 12 மாதங்களாக கார்டை பயன்படுத்தி ஒருமுறை கூட சில்லறை அல்லது கேஷ் டிரான்ஸாக்ஷன் செய்யாமலிருந்தால் ரூ. 250/- கட்டணமாக வசூலிக்கப்படும்.

குறிப்பு : தயவுசெய்து உங்களது காசோலைகள் / டிராஃப்ட்களை முழுமையாக நிரப்ப வேண்டும் மற்றும் முக்கியமான திருத்தங்கள் அருகே கையொப்பமிடவேண்டும். பேமென்ட் டியூ டேட்க்கு 3 தினங்களுக்கு முன்னதாக காசோலையை செக் கலெக்ஷன் பாக்ஸில் போடுமாறு உங்களை கேட்டுக்கொள்கிறோம். இருந்தபோதிலும், பேமென்ட் செய்யும் தேதி டியூ டேட்டாக இருக்கலாம். ரொக்கப்பணத்தை வங்கியின் கிளையில் வழக்கமான வங்கியின் அலுவல் நேரத்தின்போது மட்டுமே செலுத்த முடியும். தயவுசெய்து ரொக்கப்பணத்தை செக் கலெக்ஷன் பாக்ஸில் போட வேண்டாம்.